1973 ஏப்ரல் 2]

அதிகரிக்கும். ஐந்து மைல், ஆறு மைல், ஏழு மைல் என்று சுற்றிச் சுற்றிச் செல்லுகின்ற அந்த நிலைமைகள் இனி வராது என்று அரசு கருதுகிறது.

**திரு. த. சோனையா :** பேராசிரியர் அய்யாசாமி அவர்கள் திட்டத்தின்படி முதல் முதலாக அப்படி பேருந்துகளை விடுகின்ற நாளில் மக்கள் அதிலே ஓசியாகப் பிரயாணம் செய்ய அனுமதிக்கப் பட்டால் அதுவே ஒரு விளம்பரமாக அமையும். அரசு அதைச் செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** ஓசிப் பயணம் எங்கு எப்போது நடந்தாலும் தடுக்கப்பட வேண்டிய ஒன்று.

பிராட்வேயிலிருந்து பேருந்துகள்

* 609 வினு—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

வழித்தடம் எண் 92-ஐ பிராட்வே வரை நீட்டிக்கும் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** 22—1—1973 ஆம் நாள் முதல் வழித்தடம் எண் 92 (தங்கசாலை—ஊத்துக்கோட்டை) தங்கசாலையிலிருந்து பிராட்வே வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

**திரு. கா. வேழவேந்தன் :** நீட்டித்ததற்கு நன்றி சொல்லுகிற அதே நேரத்தில் அந்த வழித் தடங்களில் தற்போது ஓடிக் கொண்டிருக்கின்ற பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளாக விட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பழையதை முற்றிலும் மறந்து விட வேண்டியதில்லை.

* 610 வினு—**திரு. கா வேழவேந்தன் :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வழித்தடம் எண் 90 (சுண்ணும்புக்குளம்—தங்கசாலை) பேருந்துகளை சென்னை உயர்நீதி மன்றம் வரை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) & (இ) ஆம். வழித்தடம் எண் 90 (தங்கசாலை—சுண்ணாம்புக்குளம்) பேருந்துகளை சென்னை உயர் நீதிமன்றம் வரை நீட்டிக்கும் செயற் குறிப்பு பல்லவன் போக்குவரத்துக் கழகத்தின் பரிசிலனையில் உள்ளது.

**திரு. கா. வேழவேந்தன்:** அதிலே விவசாயிகளும், மற்றவர்களும் பூ, காய்கறிகள் போன்றவற்றை கொத்தவால் சாவடிக்குக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, பரிசிலனையில் இருக்கிற அந்தச் செயற்குறிப்பை விரைவில் நிறைவேற்றித் தர, அந்த வழித் தடத்தை உயர்நீதி மன்றம் வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** விரைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## வெள்ளிக்குறியிடப்படாத வினாக்கள்.

### இனாம் நிலங்கள் குறித்த வழக்குகள்

1. **வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாடு உயர்நீதி மன்றத்திலும், சுப்ரீம் கோர்ட்டிலும் தேங்கியுள்ள இனாம் வழக்குகள் எத்தனை?

(இ) அரசாங்கத்தால் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

(உ) தனியாரால் தொடரப்பட்ட வழக்குகள் எத்தனை?

(எ) இவ்வழக்குகளை விரைவில் முடிக்க எடுத்த நடவடிக்கைகள் யாவை?

விடை—

| | உயர்நீதி மன்றம் | சுப்ரீம் கோர்ட்டு |
|---|---|---|
| (அ) | 147 | 31 |
| (இ) | 8 | — |
| (உ) | 139 | 31 |

(எ) மேற்குறித்த வழக்குகளை விரைவில் முடிவு செய்வதற்கான துரித நடவடிக்கைகளை எடுக்கும்படி அரசு வழக்குரைஞரும், தலைமை நீதிமன்ற தமிழ் நாடு அரசு வழக்குரைஞரும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றனர்.